# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 78 — 1973 සැප්තැම්බර් 21 වැනි සිකුරාදා — 1973.09.21

78 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. .. | 373 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 358 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 363 | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 375 |


கவனிக்க.—தேசிய சுவடிக் கூடம் சட்டமூலமும், நிதிச் சட்டமூலமும், இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகம் (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய இலங்கை குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கொலன்னுவை நகரசபை

*களியாட்டவரிக் கட்டளைச்சட்டம்*

(267 ம் அத்தியாயமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் கொலன்னுவை நகரசபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவின் (2) ம் உட் பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்டணங்கள்மீது (267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் 1952 சனவரி 18 ன் 10,344 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினால் விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக, இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

### கட்டணத்தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் :—

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| 20 சதத்துக்கு குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 05 |
| 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 0 10 |

| வரித்தொகைநீங்கலாக அனுமதிக்கட்டணம் | தீர்மானம் ரூ. ச |
|---|---|
| 1 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து.. .. .. | 0 15 |
| 1 ரூபா 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து.. .. .. | 0 20 |
| 2 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 0 30 |
| 3 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 0 40 |
| 4 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 0 50 |
| 5 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 10 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 1 00 |
| 10 ரூபாவுக்கு மேற்படுமிடத்து— | |
| 1. முதல் 10 ரூபாவுக்கு .. .. | 1 00 |
| 2. ஒவ்வொரு மேலதிக 5 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 1 00 |

டீ. இராசேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 24 ந உ.

9-491—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

**மட்டக்களப்பு நீருதவு கருமங்கள் கட்டளைச்சட்டம்**

(209 ஆம் அத்தியாயமான) மட்டக்களப்பு நீருதவு கருமங்கள் கட்டளைச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட அறிவித்தல்.

டீ. இராசேந்திரா,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந் உ.

**அறிவித்தல்**

இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கும் மனைத்தலங்கள் (209 ஆம் அத்தியாயமான) மட்டக்களப்பு நீருதவி கருமங்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட தண்ணீர் வரியிலிருந்து 1973 ம் ஆண்டுக்கு இத்தால் முற்றுக விலக்களிக்கப்படுகின்றன.

அட்டவணை

**6 ம் வட்டாரம்**

அரசடிப் பிள்ளையார் கோவில் வீதி : இல. 24.

சோனகத் தெரு : 23/2.

முகத்துவார வீதி : 26, 76, 76/1, 80 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

பழைய வாடி வீடு வீதி : இல. 17, 21, 23, 27, 27/1, 27/2, 27/3, 31, 35, 39, 30, 32, 34, 38, 38/3, 38/4, 38/6, 38/7, 38/9, 38/15, 40, 42, 46, 46/2, 46/3, 46/5, 50.

பயனியர் வீதி : இல. 79, 81, 87, 87/1, 87/2, 91, 91/1, 92/2.

**7 ம் வட்டாரம்**

பெயிலிக் குறுக்குத் தெரு : இல. 12, 16 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

முகத்துவார வீதி : இல. 88, 100, 102, 112, 120, 122, 128, 128/1, 128/2, 132, 136, 136/1, 140, 142, 172, 192, 210, 212, 214, 220 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

புதிய வீதி : இல. 1, 3, 3/1, 3/2, 3/3, 3/4, 3/5, 20, 40, 60, 74, 76, 78, 80, 86, 90, 92, 35/2, 35, 35/1, 37, 35/3, 35/4 ஆகிய இலக்கங்களுடையன தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

வண்ணார் தெரு : 36, 36/1, 50.

லேடி மனிங் றைவ் : 135/3.

**8 ம் வட்டாரம்**

முகத்துவார வீதி : 169, 171, 171/1, 189, 189/1, 189/2, 189/3, 189/4, 195, 195/1, 197, 201, 205, 209, 215, 217, 219, 221, 225, 235.

எல்லை வீதி : 6 ம் இலக்கம் தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

புகையிரத நிலைய வீதி இல : 11, 21, 10, 18/1, 18, 20, 20/2, 20/3, 20/4, 20/5, 20/6 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

புகையிரத நிலைய குறுக்கு வீதி : 1, 9, 11, 21, 23 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

தாமரைக் கேணி வீதி : இல. 15, 15/10, 6, 6/1, 6/2, 6/3, 12, 16, 20, 20/2, 20/3, 20/4, 20/5, 20/7, 20/8, 20/9 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

எல்லை ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

தவறணை வீதி : சகல மனைத்தலங்களும்.

தாமரைக் கேணி முதலாம் குறுக்கு வீதி : 16/2, 16/4, 37, 41 ஆகிய இலக்கங்கள் உடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

தாமரைக்கேணி குறுக்குத் தெரு : சகல மனைத்தலங்களும்.

சிறில் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

திருகோணமலை வீதி : இல. 202, 210, 214, 220, 220/1, 224, 224/1, 228, 228/2, 228/3, 232, 232/1, 238, 242, 248, 252, 258.

பத்திமாகிரி வீதி : சகல மனைத்தலங்களும்.

பாரதி ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

**9 ம் வட்டாரம்**

பெய்லி குறுக்குத் தெரு : 31/4, 41, 47, 47/1, 55, 63, 63/1, 69, 73, 77 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

முகத்துவார வீதி : சகல மனைத்தலங்களும்.
பெரிய உப்போடை வீதி : சகல மனைத்தலங்களும்.

உப்போடைக் குடா ஒழுங்கை : 42/2 இலக்க மனை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்களனைத்தும்.

உப்போடை முனைப்பாதை : 1, 3, 9 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்களனைத்தும்.

உப்போடை வீதி : இல. 9, 9/3, 9/5, 9/7, 15, 19, 29, 29/1, 29/6, 29/7, 29/13, 29/20, 39, 39/2, 45, 45/1, 8, 14, 14/1, 18, 24, 28, 34, 38, 44, 44/1, 46.

உப்போடை வாவி வீதி : இல. 1, 51/1, 139/1, 149, 155, 161, 169, 169/1, 175, 175/1.

உப்போடை வாவி வீதி : இல. 2, சகல மனைத்தலங்களும்.
சக்கரியாஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
பாக்கியம் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

**10 ம் வட்டாரம்**

திருகோணமலை வீதி : 5 ம் இலக்க மனைத்தலம் தொடக்கம் 339 ம் இலக்க மனைத்தலம் வரையுள்ள (இரண்டுமுட்பட) மனைத்தலங்கள் தவிர்ந்த ஏனைய மனைத்தலங்கள் அனைத்தும்.

ஊரணி ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

எய்ரான்ஸ் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
மணி ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

புது எல்லை வீதி : சகல மனைத்தலங்களும்.
செல்வநாயகம் வீதி : சகல மனைத்தலங்களும்.

**11 ம் வட்டாரம்**

எல்லை வீதி : சகல மனைத்தலங்களும்.
1 வது எல்லை வீதி ஒழுங்கை இல. 1 லிருந்து இல. 8 வரை (இரண்டுமுட்பட).

பாரதி ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
மயான வீதி : சகல மனைத்தலங்களும்.
மயான வீதி 1 ம் இலக்க ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

சிறில் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
கூழாவடி ஒழுங்கை இல. 1 லிருந்து இல. 9 வரை (இரண்டுமுட்பட).).
குமார கோவில் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

கூழாவடி ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
1 வது குமார கோவில் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
மாமாங்கப்பிள்ளையார் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

1 வது மாமாங்கப்பிள்ளையார் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
புதிய எல்லை வீதி : சகல மனைத்தலங்களும்.
ரொசய்ரோ ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

செல்வநாயகம் வீதி : சகல மனைத்தலங்களும்.
திருகோணமலை வீதி : சகல மனைத்தலங்களும்.
1 வது திருகோணமலை வீதி ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
2 வது திருகோணமலை வீதி ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

**12 ம் வட்டாரம்**

முகத்துவார வீதி இல. : 391/1, 401, 401/1, 405, 409, 409/1, 411, 411/1, 413, 415, 417, 419, 423, 425, 427, 429, 429/1, 433, 433/1, 435, 437, 439, 441, 441/1, 443, 445, 445/1, 447, 447/1, 449, 453, 451, 455, 459, 461, 465, 465/1, 469, 469/1, 469/2, 473, 475, 475/1, 477, 481, 180 ஆகிய இலக்கங்களுடையவை தவிர்ந்த ஏனைய மனைத்தலங்களனைத்தும்.

அமிர்தகளி மயான வீதி : சகல மனைத்தலங்களும்.
அமிர்தகளி மூன்றும் குறுக்குத் தெரு : சகல மனைத்தலங்களும்.
கதிராமர் வீதி : சகல மனைத்தலங்களும்.
காளி கோவில் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.

1 வது கூழாவடி ஒழுங்கையிலிருந்து 12 வது கூழாவடி ஒழுங்கை வரை—சகல மனைத்தலங்களும்.

மாமாங்கப் பிள்ளையார் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
மாமாங்கம் வீதி : சகல மனைத்தலங்களும்.
மாரியம்மன் கோவில் ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
புதிய எல்லை வீதி : சகல மனைத்தலங்களும்.

புன்னஞ்சோலை ஒழுங்கை : சகல மனைத்தலங்களும்.
பாடசாலை வீதி : சகல மனைத்தலங்களும்.
சித்திவிநாயகர் வீதி : சகல மனைத்தலங்களும்.

9-504—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

17 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ன் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபையின் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257), 17 (5) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைச் கொண்டு கனக நாயகம் நல்லைநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம், ஆகிய நான் இந்த அட்டவணையிற் பத்தி 1 ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி 2 ல் உள்ள எற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையிற் பத்தி 3 ல் உள்ள பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையிற் பத்தி 4 ல் குறிப்பிட்ட இடத்தில் கூட்டுகின்றேன்.

க. நல்லைநாதன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சிப் பணிமனை,
யாழ்ப்பாணம், 1973 ம் ஆடு செப்டம்பர் மீ 06 ந உ.

அட்டவணை

| பத்தி (1) கிராமச் சபையின் பெயர் | பத்தி (2) திகதி | பத்தி (3) நேரம் | பத்தி (4) இடம் |
|---|---|---|---|
| உடுவில் | 1.10.73 | மு.ப. 9.0 மணி | கிராமச் சபை பணிமனை, உடுவில் |

9–528—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

**கிராமச் சபைகள் கட்டளைச்சட்டம்**

13 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க கிராமச் சபைகள் (திருத்த) அதிகாரச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (257 ம் அத்தியாயம்) 13 (1) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக்கொண்டு மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தர்மலிங்கம் வாமதேவன் ஆகிய நான், மட்டக்களப்பு மாவட்டத்து மண்முனை தென்மேற்கு கிராமச் சபையின் 6 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. உசுமுண்டாப்போடி முத்துலிங்கம் அவருடைய தெரிவின் பின்னர் சபைக்கு அறிவிக்காமல் கிராமச்சபையின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமாய் அறிந்து, மட்டக்களப்பு மாவட்டத்து மண்முனை தென்மேற்கு கிராமச் சபையின் 6 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. உசுமுண்டாப்போடி முத்துலிங்கம் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து அங்கத்தவர் பதவியைவிட்டு நீங்கியுள்ளார் என்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

த. வாமதேவன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு, 1973 ம் ஆடு செப்தம்பர் மீ 06 ந உ.

9–466—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

# நானாவித அறிவித்தல்கள்

**உள்ளூராட்சிச் சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டம்**

(261 ம் அத்தியாயமான) உள்ளூராட்சிச் சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வல்வெட்டித்துறை நகரசபையால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

தீர்மானம்

(261 ம் அத்தியாயமான) உள்ளூராட்சி சபைகள் (நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ், வல்வெட்டித்துறை நகரசபை இத்தீர்மானம் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து—

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1953, நவம்பர் 6 ந் திகதிய 10,609 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டனவும் மூதவையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டவையென 1954, மார்ச் 26 ம் திகதிய 10,657 ம் இலக்கக் கசெற் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டவையுமான நியமத் துணைவிதிகளில் XIX, XXVI பாகங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பாகங்களையும் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் இயற்றப்பட்டு 1972 மார்ச்சு 10 ந் திகதிய 15,001 இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட VIII ஆவது பாகத்தில் 1 ம் இலக்கத் துணைவிதி சம்பந்தமான அட்டவணையின் I, II, III பாகங்களையும் ஏற்றுக் கொள்வதென இத்தால் தீர்மானிக்கின்றது.

து. நவரத்தினம்,
தலைவர்,
நகரசபை, வல்வெட்டித்துறை.

நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
1973 ம் ஆடு ஆகஸ்ட் மீ 29 ந உ.

9–515—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

**நடுச்செட்டிகுளம் கிராம சபை**

உள்ளூரதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்

(261 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வவுனியா மாவட்டத்து நடுச்செட்டிகுளம் கிராம சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

தீர்மானம்

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 15,001 ஆம் இலக்க 10.3.72 ம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நியமத்துணைவிதிகளின் பாகங்கள் 1, 2, 3 ம் இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக் கொள்வதென்று நடுச்செட்டிகுளம் கிராம சபை, (261 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் (நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், இத்தால் தீர்மானிக்கின்றது.

பொ. திருஞானசம்பந்தன்,
தலைவர்,
நடுச்செட்டிகுளம் கிராம சபை.

நடுச்செட்டிகுளம் கிராம சபை அலுவலகம்,
பம்பைமடுச் சந்தி.
வவுனியா, 1973 ம் ஆடு செப்தம்பர் மீ 01 ந உ.

9–498—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

**1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சபைகளின் (நிலையான துணைவிதிகள்) பற்றிய கட்டளைச் சட்டம்**

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சபைகளின் (நிலையான துணைவிதிகள்) பற்றிய கட்டளைச் சட்டத்தின் மூன்றும் பிரிவின்படி வவுனியா மாவட்டத்திலுள்ள நடுச்செட்டிகுளம் கிராமப் பகுதியின் கிராம சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1963 ம் ஆண்டு யூன் மாதம் 21 ந் திகதிய 13,679 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப் பட்டு, செனற் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1965 ம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ந் திகதி வெளியான 14,287 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட நிலையான துணைவிதிகள் பாகம் 38 யும்,

1966 ம் ஆண்டு யூலை மாதம் 8 ந் திகதிய 14,703 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, செனற் சபையாலும், பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1969 ம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ம் திகதி வெளியான 14,835 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட நிலையான துணைவிதிகளின 39, 40, 41 ம் பாகங்களையும் இத்தீர்மானம் அரசாங்க வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று நடுச்செட்டிகுளம் கிராம சபை உள்ளூராட்சிச் சபைகள் (நிலையான துணைவிதிகள்) பற்றிய கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கின்றது.

பொ. திருஞானசம்பந்தன்,
தலைவர்,
நடுச்செட்டிகுளம் கிராம சபை.

நடுச்செட்டிகுளம் கிராம சபை அலுவலகம்,
பம்பைமடுச்சந்தி, வவுனியா,
1973 ம் ஆண்டு செப்தம்பர் மீ 01 ந் உ.

9–465—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

**கட்டைபறிச்சான் கிராமச் சபை**

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்)
சட்டம் 1 ம் (அத்தியாயம் 261)

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ம் பிரிவின் கீழ் திருகோணமலை மாவட்டத்து கட்டை பறிச்சான் கிராமப் பிரதேசத்தில் கிராம சபையினால் நிறைவேற்றப் பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின்படி பிரசுரிக்கப்படுகிறது.

**தீர்மானம்**

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1953 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியின் 10,517 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1953 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதியின் 10,560 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ்வங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகள் 1 தொடக்கம் 37 முடியவுள்ள பாகங்களையும் உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1963 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதியின் 13,679 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபை யினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1965 ஆம் ஆண்' தைமாதம் 8 ஆம் தி தியின் 14,287 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அதே நியமத் துணைவிதியின் 38 ஆம் பாகத்தையும் உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 8 ஆம் திகதியின் 14,835 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு தை மாதம் 3 ஆம் திகதியின் 14,835 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ்வங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட அதே நியமத் துணைவிதியின் 39 ஆம், 40 ஆம், 41 ஆம் பாகங்களையும் அரசாங்க உள்ளூராட்சி, உள்நாட் டலுவல்கள் அமைச்சரால் வரையப்பட்டு 1972 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதியின் சிறீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி இலக்கம் 32 ல் பிரசுரிக்கப்பட்டுள்ள அதே நியமத் துணைவிதியின் 42 ஆம் பாகத்தையும் இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக் கொள்வதென்று கட்டைபறிச்சான் கிராமசபை உள்ளூரதிகாரத் தாபனங்கள் நியமத் துணைவிதியின் சட்டத்தின் (அத்தாயாயம் 261) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கிறது.

சி. சுந்தரமூர்த்தி,
தலைவர்,
கட்டைபறிச்சான் கிராமசபை

கிராமசபை அலுவலகம்,
கட்டைபறிச்சான்,
1973 ம் ஆண்டு ஆ ஸ்ட் மீ 28 ந் உ.

9–573—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | 07.09.73 | வெள்ளி | 31.08.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.09.73 | வெள்ளி | 07 09.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21 09.73 | வெள்ளி | 14 09.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28 09.73 | வெள்ளி | 21 09.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஒற்ரோபர் | 05.10.73 | வெள்ளி | 28. 9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 05.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 12.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 19.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| நவெம்பர் | 02.11.73 | வெள்ளி | 26.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 09.11.73 | வெள்ளி | 02.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 09.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 16.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 23.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 07.12.73 | வெள்ளி | 30.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 07.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 14.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 21.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.